960

ONE ANNA LIBRARY — XI

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAR 1914
MADRAS

(TAMIL LITERARY READING SERIES)

KAMBAN & CHOLAN

960
1.14

O-/FICA:9
N14
121664.

C. R. NAMA SIVAYA

கம்பரும் சோழனும்

960
1·14

கல்வியே கருந்தனம்

சென்னை - வேப்பேரி
பி. ஜி. ஹை ஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

மூன்றும் பதிப்பு

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
[செய்தது] 1914 [விலை ஓர் அணை

171664

A1800.
2624
928.948111

PRINTED AT
THE 'CAXTON PRESS,'
MADRAS, E.

O-, 1Hea,2
.N14

M. I. P. PROJECT
Microfilmed.

M. I. P. PROJECT
Microfilmed.

OFFICE OF 13 MAR 1914 MADRAS

முன்னுரை

இது பழைய கதை, புதிய வுரை. ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாரும் அச்சம் இன்றி அகமகிழ்ந்து வாசிக்க அனுகூலமாகும்படி இக் கதை யுள் அல்வழியான சில விஷ-யங்களை நீக்கி, நல்வழியான சில விஷயங்களைச் சேர்த்துள்-ளேன். பாடசாலை மாண-வருக்கும், தமிழ் நடையில் பயில்வார்க்கும் உபயோகமாக இதுபோன்ற சில சிறு புத்த-கங்கள் வெளிவரும். இனிய பாடல்கள் இடையில் விரவி வருவது படிப்போர்க்கு இன் பம் பயக்கும். இத்தகைய நூல் வரிசைகள் பல அங்கிலத்தில் வெளிவருவதும், அவற்றைக் கையாள்வோர் களியுறுவதும் அறிந்துள்ளோர் இதனையும் கைக்கொண்டு மகிழ்வர் என்-பது ஒருதலை.

இது, 'ஓரணு வாசகவரிசை' யில் பதிஞென்றுவது. தமிழ் பயிலும் மாணவர் மாதம் ஒன்-றுக வாசித்து நலம் பெறு-வாராக.

கா. நமச்.

கல்வியே கருந்தனம்

இவ் வுலகின்கண்ணே மானிடம் பெற்ற மாண்பினை யுடையார் அடைதற்பால பெரும் பேறுகள் நான்கு. அவைதாம்: அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவற்றின் பாகுபாடுகளை அருந்தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார்,

> ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
> காதல் மனையாளுங் காதலனும் — தீதின்றிப்
> பட்டதேயின்பம் பரனெனினேத் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு

எனச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தனர். இந் நால்வகைப் பேற்றினுள், முற் கூறிய மூன்றும் இம்மையினும், ஈற்றது ஒன்றும் அம்மையினும் அடையத் தக்கனவாம். இப் பேறுகள் நான்கினையும் ஒருவனுக்கு மூட்டின்றி முடிக்கவல்லது செல்வமே. அச் செல்வம், கல்வியும் பொருளும் என இரு வகையாம். இவ்விரண்டினுள்ளும் கல்விச் செல்வம், எவ்வுயிர்க்கும் உறுப்பிற் சிறந்த கண்ணேபோல், மக்கள் அனைவர்க்கும் இன்றியமையாத அருங் கலனாகப் போற்றத் தகும். இது,

> குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்ச ளழகும் அழகல்ல — நெஞ்சத்து
> நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
> கல்வி யழகே யழகு

என்னும் நாலடியாரானும்,

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை

என்னும் நீதிநெறிவிளக்கத்தாலும், வெள்ளிடை மலை போல் விளக்கமுறும். இத்துணை நன்மைகள் பொருட் செல்வத்தாற் பொருந்தாவோ எனின், பொருந்துதலுங் கூடும். ஆயினும்,

சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளோர் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்
குறிபெறுங் கண்ணு ளாருங் குருடராய் மூடிவ ரன்றே

என்னும் பிரமாண வாக்கியத்திற்குக் காட்டாகப் பல்லோரைக் காண்கின்றோமாதலின், கல்வி கேள்விகளாலாகிய நல்லுணர்வினை எய்தப்பெறுத ஒருவனிடத்து எய்திய பொருட் செல்வம் அவனுக்குப் பல்வகையிலும் இன்னலையே விளைத்து நிற்கும். இதற்கு,

இன்னல் தரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே — அன்ன
தழித்தலுந் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்

என்னும் மூதுரையுஞ் சான்று பகரும். இது நிற்க, 'அருளிலார்க்கு அவ்வுலக மில்லை, பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை' என்னும் முதுமொழியே யன்றி,

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

எனத் தமிழ்மறை முழங்குமாறே, இம்மைப் பயன்களை இனிதின் ஈயவல்லது பொருட்செல்வ மல்லது பிறிதொன் றில்லை என்பது பெறுகின்றும். ஆயி-

னும், அப்பொருட் செல்வத்தினையும் அறத்தாற்றின் ஈட்டித் தரவல்லது கல்விச் செல்வமாதலானும்,

வெள்ளத்தாற் போகாது வெந்தணலால்
வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைபடாது
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ
மிகவெளிது கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெலாம்
பொருள்தேடி யுழல்வதேனே

என்பவாதலானும் செல்வம் இரண்டினுங் கல்வியே கருந்தனமாகக்கருதப்படுஞ் சிறப்பினையுடையதாம்.

இனி, வளவனே யென்ன வளநீதி படைத்த மணிமுடி மன்னரும் இப்புவியின்கண் உயிர்வாழுந்தனையும் பெரும்புக ழெய்தி, இறந்துபட்ட பின்னர் பேரழிந்து ஒழிதலும், கவிவாணர் பூதவுடம்பு நீங்கினும், தாம் இயற்றிய நூல்களாற் புகழுடம்பு எய்தி என்றும் அழியாமல் விளங்குதலும் கண்கூடாகக் காண்கின்றோமன்றே? இக் கருத்துப்பற்றியே,

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன்வண்டமிழோர்க்கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு

என நீதிநெறிவிளக்கமும் நிகழ்த்துகிறது.

மற்றும், 'அறிவுடை யொருவனே யரசனும் விரும்பும்' என ஆன்றோர் கூறியபடி, பொருளுடையோனும் கல்வியுடையோனைக் காதலிக்கின்றனன். இதுகொண்டு, 'மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' என்னும் உறுதிமொழியை வலியுறுத்தும் வரலாறு ஒன்றினை யீண்டுக் கூறுவோம் —

கம்பரும் சோழனும்

செந்தமிழ் மொழியைச் செல்வர் கூட்டுணை
நந்தலில் நூல்கள் நலம்பெற வருளிய
நடுநீர் மையினெம் நரைமூ தாட்டி
தொடுநீர் வரைப்பிற் சோறுடைத் தென்னும்
தொல்சீர் பாவிய சோணாட் டின்கண்

செங்கோல் செலுத்திய குலோத்துங்கச் சோழன் என்பான் தன் ஆஸ்தான கவிச்சக்ரவர்த்தியோடு, வசந்தகாலத்து ஒருநாள் மாலைப்போதில் உய்யான வனத்துள் உலவச் சென்றான். அங்கு, தடாகத்தில் தாமரை மலர்கள் தலையவிழ்ந்து, மந்த மாருதம் அந்தமாக வந்து உந்துந்தோறும் அசைந்து விளங்கும் காட்சி, வாவியாகிய வனிதை கஞ்சமலர்களாகிய கரங்களால் புவிக்கரசையும் கவிக்கரசையும் பரிந்து அழைப்பதேபோல் தோன்றிற்று. பின்பு, அவ்விருவரும் குளக்கரையைக் குறுகி, ஆண்டிருந்தோர் செய்குன்றின்மீது சிறக்க அமர்ந்து, தம்மைச் சூழ நோக்குதலும்,

திருவளர் சீர்த்திச் செய்யதா மரையில்
உருவளர் செங்கால் ஓதிமம் களிக்கக்
கூத்திய ரென்னக் குலமயில் நடிக்க
நீர்த்துறை தோறும் நேரிய திரைகள்
முழவொலி காட்ட முன்னுஞ் சுரும்பினம்
அடிகொள் சுதியை யன்புடன் கூட்ட
மாமரக் குயிலும் மன்னுஞ் சுகமும்
ஏழுற வின்னிசை யியைத்துப் பாட
இன்னன அமைந்த இயலிசை யோடும்
நன்னய நாடகம் நடக்கக் கண்டு
மனமகிழ் சிறந்த வள்ளியோ ரென்ன
இனமுறு வரிவளை யெழின்முத் திறைப்ப
வானிமிர் தருக்கள் மலர்மழை பொழிய
கானமர் கடுக்கைபொன் கனிவி னளிக்கக்

கண்டு, மன்னன் தன் உடல் குலுங்க நெடும் பொழுது நகைத்தான். அதுகண்ட கம்பர் மன்னனை நோக்கி, 'அரசே!' நீர் இவ்வாறு நகுதற்கு நேர்ந்த காரணம் யாது? வியப்பு என்னே!' என, மன்னன், 'யான் வறிது நகைத்தேன் அல்லேன்; அதன் காரணத்தை என்னென்று உரைப்பேன்!' எனக் கூறி, வாளா இருந்தனன். கம்பர் அதுகேட்டு, 'அதனை யாம் அறிதல் நேரிதன்றே?' என, மன்னன், 'தாம் அறியக்கூடாததும் ஒன்று உளதோ?' என மற்றும் நகைத்து, 'ஐய! யானேர் மானிடனேயாயினும் இந் நாட்டகத்து எய்திய உயிர்கள் அனைத்தும் எனக்கு அடக்கமே யன்றே?' என்றான். அது கேட்ட கம்பர், 'அதற்கோர் ஐயப்பாடும் உண்டோ? உலகம் உமக்கடக்கம் என்பதும், நீர் நமக்கடக்கம் என்பதும் அறியாதார் யாவர்?' என்றனர். சோழன் அச்சொல்லைக் கேட்கப்பொறாமல் முகம்வாடி, தன் மனத்தினுள்ளே, 'இவனென்ன நம்மைப்போல் மன்னர் மன்னனே? செல்வத்திற் சிறந்த சீமானே? நமது நிழலிலிருந்து, நம்மிடத்து ஊதியம் பெற்று ஜீவிக்கும் வாழ்க்கையுடையோன்றானே; இவன் இவ்வாறு எண்ணுதல் எவ்வாறு ஏற்கும்? இவனது நெஞ்சத் துணிவும், பெருமிதமும் இருந்தவாறு என்னே!' என்று உன்னி, தன் சினத்தைப் புறத்தே காட்டாது ஒருவாறு அடக்கி, விரைந்து அரண்மனையை யடைந்து விசனத்துடன் தன் அமளியில் அமர்ந்து இருந்தான். அப்பொழுது வழக்கமேபோல் அரசி சிற்றுண்டி கொணர்ந்து மன்னன் முன்வைத்து உண்க என உபசரித்தாள். அரசன் அதனை உண்ணுது வாட்டமுற்றிருக்க, அம் மாதரசி மன்னனை நோக்கி, 'என் ஆருயிர்த் தலைவ! தாம் இவ்வாறு வாட்டமுற்று இருப்பானேன்?' எனப் பல முறை

வினவ, அரசன் தனக்கும் கம்பருக்கும் பொழிலில் நேர்ந்தன யாவும் புகன்றனன்.

அது கேட்ட அரசி, கம்பரது கல்வித்திறத்தை யுன்னி, ஒன்றுங் கூறுதற்கின்றி நிலைத்து நின்றனள். அது கண்ட பொன்னி என்னும் பெயரினையுடைய பாங்கியொருத்தி பார்த்திபனை நோக்கி, 'எம்பெருமானே! இதற்கேன் வாட்டமுறவேண்டும். தேவரீரைத் தனக்கு அடக்கம் என்று கூறிய அக் கம்பனை இதோர் நொடிப்போதில் எனக்கு அடிமையாக்கிக் காட்டுவேன்; என் திறத்தை இதனிற் காணலாம்' என்று கூறி, உத்தரவு பெற்று, தன் இருக்கையை யடைந்து, தனது தோழியரில் ஒருத்தியை விளித்து, 'கம்பர் இப்போது இத்தெருவூடே எகுவர்; அவரை யான் காண விழைவதாகக் கூறி, நம் அகத்தில் அழைத்து வருவாய்' எனக் கட்டளையிட்டு, ஆடை அணிகளால் தன்னைப்புனைந்துகொண்டு, ஒருபுறத்து அமர்ந்து, கம்பரது வரவை எதிர்பார்த்திருந்தனள்.

இஃது இவ்வாறுக, பொழுதுபட்டும் புரவலன் வராமைகண்ட புலவர், 'என்னே! மன்னன் இன்னும் வந்திலன்; யாம் சொன்ன சொல் சுட்டது போலும்' என்றெண்ணி, தம் இல்லத்திற்கேக அரண்மனை மறுகூடே போயினர். அதுகண்ட தோழி அவரை யண்மி, தன் தலைவியின் விண்ணப்பத்தை வெளியிட்டு, அகத்துக்கு அழைத்துச் சென்றனள். கம்பரதுவரவைக் கண்ட, பொன்னி இருக்கைவிட்டு எழுந்து, எதிர் சென்று வணங்கி, முகமன் கூறி, உயரிய ஆதனத்திலிருத்தி, பக்கலில் நின்று, 'புலவர் பெருமை! அடியேன் விண்ணப்பம் ஒன்றுண்டு; அதற்குத் தேவரீர் உடம்பட்டருளல் வேண்டும் என்று வேண்டி நின்றனள். கம்பர் அவள் வேண்டு

கோளுக்கு இரங்கி, 'அம்மையே! என்னுல் இயன்ற தொன்றை யாவர் வேண்டினும் மறுப்பதில்லையே; அரசர்க்கு அடிமைப்பட்ட தாம் ஒன்று வேண்டின் மறுப்பது முண்டோ? இல்லை, இல்லை. ஆதலின், என்னுற் கூடிய தொன்றைக் கொடுத்தற்கு மன மொழி மெய்களால் இசைகின்றேன்' என, பாங்கி தன் எண்ணம் பலித்ததென்று உள்ளங் களித்து, 'கவிஞர் பெருமை! எனக்குத் தாங்கள் அடிமை யென்று எழுதித் தரவேண்டும்' என்று வேண்டலும், கம்பர் இது மன்னன் சூழ்ச்சியால் நேர்ந்தது என்றுன்னி, நகைத்து, 'அம்மே! இது வொரு காரியமோ?' எனக் கூறி, ஓர் ஏட்டின்கண் எழுத்தாணி கொண்டு, 'தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை' என வரைந்து, அடியில் கையொப்பம் இட்டு, நாள் குறித்து, அவள் கையிற் கொடுத்து, தம் சிவிகை இவர்ந்து வழிக்கொண்டு ஏகினர்.

பின்னர், அப் பாங்கி அந்த ஏட்டைக் கையிலேந்தி விரைந்து சென்று, வேந்தனைத் தொழுது, 'எம்பெருமானே! இதுபாரும், இதுபாரும்! உமக்கு ஆட்பட்ட யான் அக்கம்பனை அடிமையாக்கிக்கொண்டேன்' என்று பெருமிதத்தோடுங் கூறி, அந்த ஏட்டை நீட்டினுள். அரசன் அதனைப் பெற்று, பன்முறை நோக்கி உளம்பூரித்து, பெருமகிழ்வடைந்து, 'ஆஹ! இவளன்றே பெண்மணி! என் நோயை நொடிப்போதில் நீக்கினள். இப்பொழுது அந்தக் கம்பனது மனச்செருக்கும் கல்விப் பெருக்கும் என்னும்?' என இழித்துரைத்து இன்பமுற்றிருந்தான். மறுநாட் காலையில் அமைச்சர் முதலிய அனைவரும் அத்தாணி மண்டபத்தை யடைந்திருக்க வெனக் கட்டளையிட்டு, அரசனும் வந்து அமர்ந்திருந்தான்.

கம்பரும் காலந் தாழ்த்தாது அரசன் அவைக் களத்தை யணுகிப் பார்த்திபன் பக்கலில் வீற்றிருக்க, மன்னன் அவ் வடிமைச் சீட்டைக் கையிற்கொண்டு கம்பருக்குக் காட்டி, 'இதனில் இட்டிருக்கும் கையொப்பம் தம்முடையதுதானே?' என, கம்பர், 'ஆம்' என்றனர். பின்னர், அரசன் அதனைக் கற்றுச் சொல்லியின் கையிற்கொடுத்து, 'ஈண்டுள்ளார் யாவருங் கேட்குமாறு இதனை யுரத்துவாசிக்க' என, அவனும் அதனை அங்ஙனமே, 'தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை' என்று வாசித்து நின்றான். அதனைக்கேட்டு அங்கிருந்த அறிஞர் முதலாயினர், 'இதென்ன, இதென்ன!' என வியப்புற்று அசைவற்று இருந்தனர். அரசன் கம்பரை நோக்கி, 'தாசி பொன்னிக்கு நீர் அடிமைதானே' என்று வினவுதலும், 'ஆமாம், அதற்கோர் ஐயமுண்டோ?' என, பார்த்திபன் தன் உடல் குலுங்க நகைத்து, புவிச் சக்கரவர்த்திகளையும் அடிமைகளாகக் கொள்ளவல்ல நீவிர் இவ்வாறு ஒரு தாசிக்கு அடிமை யாதல் இழிவு அன்றோ?' என்றான்.

கம்பர், 'இதிலென்ன இழிவு? பிறர் பொருளை வவ்விலை மில்லை. பொய்க் கரி யுரைத்தோ மில்லை. யாம் கூறிய சொற்றொடரின் உட்கருத்தை உள்ளவாறறியாதார்க்கு யாவும் இழிவாகவே தோற்றும்' என, மன்னன், 'இதேது புதுமையாகக் காண்கிறது! இதனுள் ஏதோ கவர்படு பொருளும் இருத்தல் கூடும்' என்றுன்னி, 'அதன் உட்பொருள் யாது? உரைமின்' என்று வினவினன். கம்பர் அதற்கு விடையாக, 'வேந்தே! தாசி பொன்னிக்குக் கம்பன்-அடிமை' என்னுஞ் சொற்றொடரில் தா, சி, பொன்னி, கு, கம்பன், அடிமை என ஆறு சொற்கள் அமைந்து

உள்ளன. இவற்றில் முதற்சொல் தா; இதன் இறுதியில் யகர ஒற்று கடைக்குறை விகாரம் பெற்றது. இரண்டாவது சி; இது ஸ்ரீ என்னும் வடமொழிச் சிதைவு, குறுக்கல் விகாரம் பெற்றது. மூன்றுவது பொன்னி; இது பொன் என்னும் பொருட் பெயர் இகரவிகுதி பெற்றுப் பெண்பாலைக் காட்டிற்று. நான்காவது கு; இது நான்காவதன் உருபு. ஐந்தாவது **கம்பன்**; இது கம்பு என்னும் பொருள் அடியாகப் பிறந்த ஆண்பாற் பெயர். ஆறுவது **அடிமை**; இது பண்புப்பெயர். ஆக இதன் பதப் பொருள், தாய் = எவ்வுலகிற்கும் தாயாகிய, சி = ஸ்ரீ தேவியென்னும், பொன்னிக்கு = இலட்சுமிக்கு, கம்பன் = கம்பனாகிய யான், அடிமை = ஆட்பட்டிருக்கின்றேன். ஆதலால், உலகிற்கு அன்னையாகிய ஸ்ரீதேவி யென்னும் இலக்குமிக்குக் கம்பனாகிய யான் அடிமையென்பது இதன் பொழிப் புரையாம். இதனால் எமக்கு இழி விருந்தவாறு எங்ஙனம்? நீரேன் அல்வழிப் பொருள் கொண்டு எம்மை ஏளனஞ் செய்கின்றீர்? ஒருவர் ஒன்று கூறினால் அதன் கருத்தை உள்ளும் புறமும் நோக்கி உய்த்துணர வேண்டும் என்று இடித்து உரைத்தார்.

சோழன் இத்திரிசொற் பொருள்களைச் செவியிலேற்று, தன் இறுமாப்பனைத்தும் இழந்து, மிகச் சீற்றங்கொண்டு, 'இந் நாவலர்களை அணுவளவும் நம்பலாகாது. இட்டானை இந்திரன் என்றும், இடாதானை இழிஞன் என்றும் கூறும் குணக்கேடு இவர்களிடத்தே குடிகொண்டுள்ளது. அன்றித் தம் கூற்றை எற்றவாறு மாற்றிக்கூறும் ஆற்றலுடையரும் ஆவர். ஒருவனைப் **புத்தி** இல்லாதவன் என்று இகழ்ந்தும், பின்னர், அவனையே **புத்தியில்** ஆதவன் என்று

புகழ்ந்தும் பல பொருள்படப் புகன்று, பொருள் பறிப்பர் என்னுங் கருத்தை யடக்கி,

போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடில்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களே
மாற்றினும் மாற்றுவர் வன்க ணுளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே

என்றதோர் செய்யுளும் கூறியபின், கம்பரை நோக்கி, 'இன்றுதொட்டு நீர் எம் தேயத்தின்கண் இருத்தல் கூடாது. யாம் உமக்கு அளித்துள்ள விருதுகள் முதலிய அனைத்தும் இவ்விடத்தே வைத்துவிட்டுச் செல்லும்' என்றான். கம்பர், மன்னன் கூறியவாறே அவனளித்த விருதுகளே யன்றி உடை முதலியவற்றையும் களைந்து வைத்து,

காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ — மேதினியில்
கொல்லிமலை நாடாளுங் கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்

என்னும் பாடலையும் இயம்பி, 'யான் தேடியடைந்தால் ஏற்றுக்கொள்ளாத ஏந்தலும் உண்டோ?' என்னும் கருத்தினில்,

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன் — என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு

என மற்றோர் செய்யுளையுஞ் செப்பியபின், 'இனி, யாம் இத்தேயத்தின்கண் வருதலுண்டாயின், உம்மை யொத்த ஓர் அரசனை எமது ஏவலனுகக் கொண்டு வருவோம்' எனச் சூளுரை யுரைத்து, அரசன் அவைக்களத்தை யகன்றனர்.

பின்பு, கம்பர் தமது செலவை ஒருவரோடும் உரையாது, உண்டி யின்றி, ஊக்கமே பெரிதுங்-

கொண்டு, நாள் பல நடந்து ஒரு சிற்றூரை யடைந்தனர். அப்பொழுது பசிப்பிணி கடுகுதலும், கம்பர் மெய்வாடி, அறிவு சோர்ந்து, அவ்வூர் வீதியில் திரிந்து செல்லுகையில், ஒரு தாசி வீட்டின் புறக்கடையில் இடிந்துள்ள சுவரொன்றை ஏற்றவல்லார் யாவராயினும் இருநாழி நெல் கூலி யடையலா மென்று அங்குள்ளார் கூறக்கேட்டு, மனமகிழ்ந்து, அவ் வீட்டுக் கடைப்புறஞ் சென்று, மண்கூட்டி நொடிப்போதில் சுவரேற்றிவிட்டுக் கூலி கொள்ளத் திரும்பினர். திரும்புங்கால், அங்கிருந்த பிரமராக்கதத்தின் செய்கையால், அச்சுவர் சாய்வது கண்டு, தணுக்குற்று,

மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவார் ஈங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே

என்னுமோர் அருங்கவி இசைத்தார். இக் கவியின் நலத்தை யுணர்ந்த அந்தக் கழுது கால்வாங்கி ஓடவே, சுவர் நிலைத்து நின்றது. பல்லோர் முயன்றும் நெடுங்காலமாக நிறைவேறுதுகிடந்த அச்சுவர் நிலைநின்றதைக் கண்ட அம்மாது கம்பரை நோக்கி, 'பெரியோரே! தேவரீர் அடியாளது இல்லத்திலேயே இருக்கலாமே' என்று பணிந்து வேண்டலும், அதற்கு அவர் உடம்படாது. ஒருவேளை யுணவு கொண்டபின், தம் வழியே சென்றனர்.

கம்பர் அப்பால் நெடுந்தூரம் செல்லுகையில் பசிப்பிணி வாட்டுதலும், ஒரு கோமுட்டிக் கடையை யணுகி, 'ஐயா! பசிப்பிணி வருத்துகிறது, சிறிது அவல் கொடும்' என வேண்ட, அவன், 'பொதிக்கு அளப்பதற்குள் சத்தத்திற்கு அளக்கச் சொல்வது போல்' கடை போணியாவதற்கு முன் உனக்குக்

கொடுக்கச் சொல்லுகின்றீயோ? நல்லதாயிற்று, அவனுமில்லை அடகுமில்லை போ' என்றான். அக் கடு மொழியைச் செவியிலேற்று, மற்றுஞ் சிறிதுதூரம் சென்று, செக்கான் எள்ளாடுவது கண்டு, 'அப்பா! பசிக்குக் கொஞ்சம் பிண்ணாக்குக் கொடு!' என்றார். அவனும் ஈந்தானில்லை. அதன்பின், அவர் ஓர் அந்தணன் அகத்தை யடைந்து, 'நீர் வேட்கையினல் நெஞ்சு புலர்கிறது; சிறிது தண்ணீர் தருக' என்றார். அவ்வந்தணன், 'சூத்திரனுக்குவார்த்த தீர்த்த சேஷம் பிராமணருக்கு அருகமாமா? போ, போ' என்று துரத்தினன். அந்தோ, என்ன செய்வார் இன்னிசைக் கவிஞர்!

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்

என்பதேபோல், பசியாலும் தாகத்தாலும் பரிதபித்து, ஒரு பாதபத்தின் நிழலில் படுத்திருந்தனர். அங்கு, உழவனொருவனுக்கு உணவு வர, அவனதை உண்ணும் சமயத்து, கம்பர் சென்று கையேந்தினர். அவன் அந்தப் பழஞ்சோற்றை அவருக்குப் பரிந்திட்டு உபசரிக்க, கம்பர் அதனை உழவனெடிருந்து உண்டு பசிதீர்ந்த பின்னர்,

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே — முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்

என்று ஒரு செய்யுள் கூறினர். வேளாளன், 'ஆஹா! யாம் இப்பாவலர்க்கு பகிர்ந்திட்ட பழையதையுண்டு அவர் பாடிய பாடலின் பயனல், இனி அழியாச் செல்வம் அடைவோம். அதனல், நம் தரித்திரம்

தலைகாட்டாது ஒழியும்' என்று உளம் பூரித்து, அவரைப் பலமுறை வணங்கி, தன் அகத்திற்கு அழைத்துச் சென்று, அறுசுவை யுண்டி யமர்ந்து ஊட்டி உபசரித்து, சில பகல் தன்னிடத்தே இருத்திக்கொண்டான்.

பிறகு, கம்பர் தம்மைச் செல்ல விடுமாறு கேட்க, வேளாளன், 'ஐய! தமதருளால் அடியேன் இல்லம் தூய்மை யடைந்தது. ஆதலின், தாங்கள் யாண்டும் போகாது ஈண்டே இருக்கலாமே' என, கவிஞர் அவனை மறுத்து, மற்றொன்றும் வேண்டாது, நன்னன்கு மூழத்தில் இரண்டு வெள்ளுடை மாத்திரம் கேட்டுப் பெற்று, அரையி லொன்றும், தலையி லொன்றும் அணிந்து, விரைந்து சென்று, சேரநாட்டை யடைந்தனர். பின்பு, கம்பர் அங்கு ஒரு சீமானை யடுத்து, 'ஐய! நான் கம்பரிடத்தில் இருந்த அடைப்பைக்காரன்; அவர்க்கும் சோழற்கும் பூசல் நேர்ந்தமையின், அவர் அந் நாட்டை நீங்கி யாண்டுச் சென்றனரோ அறியேன்; அதனல் யான் இப்படி வந்துவிட்டேன்; தாங்கள் தயை கூர்ந்து எங்கேனும் கைகாட்டினல், தங்கள் பெயரைச் சொல்லிப் பிழைப்பேன்' என, அப்பிரபு, கம்பரிடத்தி லிருந்தவனென்னும் அன்பினல், அவரைச் சேரன்பால் அழைத்தேகி, அங்கு அடைப்பைத் தொழிலி லமர்த்தினன். அன்றுமுதல் கம்பர் சேரனிடத்தில் அத்தொழிலைச் செவ்வனே செய்து வருகையில், சேரன், ஒரு பகல் தன் அரண்மனைக் கவிஞர்களை நோக்கி, கம்ப ராமாயணத்தில் சில அரிய செய்யுள்களை எடுத்துப் பிரசங்கம் செய்யுமாறு வேண்டினன். அவர்கள் பாலகாண்டத்து வேள்விப் படலத்தில்,

எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய மூனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்

என்னும் பாடலை இசையுடன் இயம்பி, அதற்குப் பொழிப்புக் கூறுவாராயினர். 'கோசிக முனிவன் தேவர்கள்பொருட்டு ஐந்தாறு நாட்கள் வரையில் எண்ணுதற்கும் இயற்றுதற்கும் அரியதாகத் தொடங்கிய யாகத்தினை, உலகத்தைப் பாலனம் பண்ணும் தசரத மகாராஜனது புத்திரர்களாகிய இராமனும் இலட்சுமணனும், கண்ணைப் பாதுகாக்கும் இமைகளேபோல் காத்தனர்' என்று உரைத்தனர்.

அப்பொழுது அரசன், அந்தப் பிரசங்கத்தை அங்குள்ளார் அனைவரும் ஆதரவோடுங் கேட்கின்றனரோ என்றறிதற்பொருட்டு, அவரவர் முகத்தைக் குறிப்பின் உற்று நோக்க, யாவரும் ஒருபடித்தாகச் சிந்தை செலுத்திக் கேட்கின்றனர் என்ப துணர்ந்தனன். பின்னர், தன் அண்டையிலிருந்த அடைப்பைக்காரன் முகத்தினைப் பார்த்தலும், அவன் வியக்க வேண்டியவிடத்து விசனமுற்றும், களிக்க வேண்டிய விடத்துக் கலங்கியும், விசன மூறவேண்டியவிடத்து வியந்தும் இருப்பதுகண்டு, அரையன் அவனை, 'என்ன நீ இவ்வாறு இருக்கின்றனை?' என்று வினவ அடைப்பைக்காரன், 'அரசே! இந்தப் பிரசங்கம் இந் நூலியற்றிய கர்த்தாவின் கருத்திற்கு இசைந்திருக்கவில்லை' என, சேரன், 'கம்பர் கருத்தை நீ எவ்வாறு அறிவை' என, அவர், 'அரசே! கம்பரிடத்து யான் அடைப்பைக்காரனாக இருக்கையில் அவர் பிரசங்கிக்க யான் அருகிலிருந்து கேட்டு இருக்கின்றேன்' என்றார். 'ஆயின், நீயும்

பிரசங்கிக்க வல்லீயோ ?' என்று வேந்தன் வினவ, அவர், 'ஆம், சிறிது வல்லேன்' என்றார். அரசன், 'அவ்வாறாயின் அவர்கள் கூறிய செய்யுளுக்கே நீ உன்னுற்றல் தோன்ற வுரை விரிக்க' என, அடைப்பைக்காரனாகிய கம்பர் பிரசங்கிப்பாராயினர்.

'எண்ணுதற் காக்கரிது' என்னும் பாடலின் முதல் மூன்றடிகளுக்கு இவர்கள் கூறிய பொருள் ஒருவாறு பொருத்தமுடையதே. முதலடியின்கண் எண்ணுதற்கு, ஆக்குதற்கு அரிய வேள்வி என்றதனோடு சொல்லுதற்கும் அரியது என வருவித்துச் சொல்லுதல் ஏற்புடையது. 'கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்' என்னும் நான்காம் அடியில் பொருள் சிறக்கவில்லை. அதைச் சிறக்கச் சொல்லுங்கால், மேலிமை கீழிமை என்னும் கண்ணிமை இரண்டில், மேலிமை பெரியது; கீழிமை சிறியது. அன்றி, மேலிமை இயங்குந் தன்மையுடையது; கீழிமை நிலத்து நிற்பது. மேலிமையேபோல் மூத்தோனாகிய ராமன் நிலபெயர்ந்து, கோசிக முனிவன் ஆச்சிரமத்தின் நாற்றிசையினும் அரக்கர் வந்து துன்புறுத்தா வண்ணம் சுற்றித் திரிந்து காவல்செய்தான். இளையோனாகிய இலட்சுமணன் கீழிமையேபோல், உட்புறத்தில் ஒருவரும் புகாவண்ணம், ஆச்சிரமத்தின் வாயிலில் அசையாது நின்று காவல் செய்தான். இமைக்குந்தோறும் மேலிமை கீழிமையைத் தீண்டுவதேபோல், ராமன் ஆச்சிரமத்தின் புறத்திற் சுற்றி வருந்தோறும் அதன் வாயிலில் இருந்த இலட்சுமணனை எச்சரித்தவாறே இருந்தனன் என்பதாம்.

பிரசங்கத்தில் பிள்ளைக்கும் பேதைக்கும் விளங்கும்படி பொருள் விரித்துரைப்பது சிறப்பென்-

றும், அப்புலவர்கள் பிரசங்கித்த மற்றும் சிற்சில பாடல்களுக்கு அதனதன் உள்ளுறைப் பொருள்களை எடுத்துரைக்க வேண்டுமென்றுங் கூற, அரசன், 'ஆஹா, இதற்கொப்பாக எவருடைய பிரசங்கம் ஏற்கும்! இதனினும் அக்கம்பர் பிரசங்கம் எப்படி இருக்குமோ!' என்று வியந்து அன்று முதல் அடைப்பைக்காரனாகிய கம்பர் உயிரும் அரசன் உடலுமாக நேசித்து, தன்னோடும் அவருக்கு அன்னபானாதிக ளருத்தி, மற்றைய கவிஞரினும் அவரைப் பதின்மடங்கு மேன்மையாகப் பாவித்து வந்தான்.

அதுகண்டு, அங்கிருந்த கவிவாணரனைவரும் கம்பர்பால் பொறுமைகொண்டு, காரணம் ஒரு சிறிதுமின்றிப் பகைத்தனர். 'தென்றல் முற்றிப் பெருங் காற்றானதுபோல்' நாளுக்குநாள் அப்பகை முற்றுதலும், அவர்கள் ஒன்று கூடி, அடைப்பைக்காரன் இழிகுலத்தவனென்று ஓர் அபவாதமுண்டாக்கி, அவனிடம் அரசற்கு விரோதமுண்டாகும்படி செய்யலாமென்றுன்னி, அரசற்கு கூஷ்ளரம் செய்யும் அம்பட்டனை அழைத்து, 'நீ அடைப்பைக்காரனை உங்கள் இனத்தவனென்று எவ்விதத்திலாயினும் அரசற்கு உறுதியாகத் தோன்றுமாறு செய்தால், உனக்கு ஆயிரம் வராகன் அளிப்போம். அதனால், உனக்கு நேரும் தண்டனையும் வரவொட்டாது விலக்குவோம். அதன்பொருட்டு எவ்வளவு செலவு நேரினும் தருவோம்' என்று, அவனுக்கு உறுதி யுண்டாகும்படி சொல்லி, உடன்படிக்கை எழுதி முற்பணமும் கையிற்கொடுத்தனர். கைமேல் கருந்தனங் கண்ட மாத்திரத்தானே, 'பணமென்றூற் பிணமும் வாய்திறக்கும்' என்னும் பழமொழிக்கு ஏற்ப, அவன் ஆசை மேலீட்டால் அத் தகுதியற்ற

செய்கைக்கு உடன்பட்டு அடைப்பைக்காரனையே யன்றி, அரசனையும் கெடுக்க ஏற்ற சமயம் எதிர் பார்த்திருந்தனன்.

சோனது சிங்காதனத்தின் பக்கலில் வீற்றி-ருந்த கம்பர், ஒருநாள், ஏதோ காரணமாக அதி-னின் றிறங்கி ஆசாரவாயிலின் அருகே வருதலும், ஆண்டு காத்திருந்த அம்பட்டன், அனைவருங் காண அவரைக்கட்டித் தழுவி, 'அண்ணு! இவ்வளவு கால-மாக உன் முகத்தைப் பாராம லிருந்தேனே! நீ எங்கே போயிருந்தாய்?' எனக் கோவென்று கூக்-குரலிட்டு அழுதான். கம்பர், அச் சர்ப்பனையை ஊகித் தறிந்து, அவனைத் தாமும் கட்டித்தழுவிக் கதறினர். அம்பட்டன் தானே ஒருவாறு தேறி, கம்பர் கண்ணீரைத் தன் மலின வஸ்திரத்தால் துடைக்க, அவர் நடித்துக்காட்டிய பொய்த்துக்கம் மாறி, அம்பட்டனை நோக்கி, 'அடா தம்பி! நீ குடி யிருக்கும் இடமெங்கே? உனக்குக் கலியாணம் ஆயிற்று? பிள்ளைகள் எத்தனை? பார்ப்போம் வா' என்று அழைத்துக்கொண்டு சபையை அகன்றனர்.

அடைப்பைக்கார னகிய கம்பர் திரும்புகை-யில், 'அப்பா! குழந்தைகள் இருக்குமிடத்தே வெறுங் கையோடு ஏகலாகாது. பெரியோர், கோயிலுக்கும் குருவின் சந்நிதானத்திற்கும் ராஜ சமுகத்திற்கும் குழந்தைகளிடத்திற்கும் வெறுங் கையோடு போகலாகாது என்கிறார்களே,' என்று இயம்பி, கடைவீதியில் சென்று, சிறிது சிற்றுண்டி வாங்கிக்கொண்டு, அம்பட்டன் வீட்டின் அருகிற் சென்றவுடனே, அவன் தன் குடிசைக்குள் மூன்பு நுழைந்து, தன் மனைவியை விளித்து, 'அடி! இதோ உன் மூத்தார் வந்தார்; அவருக்கு மனை

போடு' என்றான். அவள் ஒரு கட்டை மணையை எடுத்துப்போட, கம்பர் அதன்மேல் உட்கார்ந்த பின்னர், காலில் விழுந்து சேவித்தாள். கம்பர், 'நீ தீர்க்க சுமங்கலியாக இருக்க' என வாழ்த்தி, 'குழந்தைக ளெங்கே?' என, அம்பட்டன் தன் மூன்று மைந்தரையும் நோக்கி, 'உங்கள் பெரிய அப்பா அழைக்கின்றார், வாருங்கள்' என்று எதிரில் கொண்டு வந்துவிட, அப் பிள்ளைகளைக் கம்பர் வாரியெடுத்து மார்போ டணைத்து, முகத்தோடு முகம்வைத்து, கண்ணோடு கண்ணைற்றி, முத்தாடி, 'என் அருமை மக்காள்! நான் உங்கள் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழவும், தளர் நடையைக் கண்டு களிக்கவும், கொடுத்துவையாமற் போனேனே!' என்று கண்ணீர்விட்டு, ஆர்வத்தோடு பல முறை அவர்களை யணைத்துக் குலாவியபின், கம்பர் அம்பட்டனது வஞ்சத்தை முற்றும் உணருமாறு ஒரு சிறை வாளா இருந்தனர். அம்பட்டன் கம்பரை நோக்கி, 'அண்ணே! சாப்பிட எழுந்திரும்' என்றான்.

அப்பொழுது கம்பர், மயிர்வினைஞனை நோக்கி, 'தம்பி! உனைவருந்துமுன் உன்னோடு சிற்சில நியாயங்கள் பேசவேண்டி யிருக்கின்றன' என, அவன் 'உண்ட பின்பு பேசலாமே' என்றான். கம்பர் 'அப்படிச் செய்வது அடாது; உன் சோற்றையுண்டு உனக்குத் துரோகம் செய்ததாக முடியும்; ஆதலால், இரண்டொரு பேச்சு முன்பே பேசிமுடித்து, பின்பு உண்பது உத்தமம்' என்றார். அம்பட்டன், 'அதென்ன?' என, கம்பர், 'தம்பி! நம்முடைய முன்னோர்களுக்குத் தாயபாகம் பிரியவில்லை என்பது நீயறிவையன்றோ?' என, அவன், 'ஆம்' என்றான். கம்பர், 'நாம் அந்தக் காலத்தில் ஒருவரை

யொருவர் விட்டுப்பிரிந்து திசைகெட்டுத் தடுமாறிப் போனபின்பு, கடவுளருளால் நீ இவ்வரசனை அடுத்துச் சுகப்பட்டிருக்கிறாய்; யாரை கொள்கொம்பு இல்லாக் கொடிபோல், அலைந்து திரிந்தேன். நிற்க, இருபது வருஷகாலமாய் உன் முறையாக நீ அரசருக்கு ஊழியஞ் செய்துவந்ததுபோல, நானும் இருபதாண்டு அத்தொழிலைச் செய்யவேண்டுவது முறையல்லவா?' என்றனர். அவன், 'அதற்குத் தடையென்ன, தங்களிஷ்டப்படியே செய்யலாம்' என்றான். பின்பு கம்பர், 'தம்பி, நீ உடம்பட்டனை மெய்யே, என்னிடத்தில் க்ஷௌரம் செய்து கொள்ள அரசரும் சம்மதிக்க வேண்டுமே, அவரைக் கேட்டறியலாம் வா' என்று அவனை அழைத்துக் கொண்டு அரசவையை யணுகினர்.

இதுநிற்க, அம்பட்டன் ராஜசபையில் கம்பரை, 'அண்ணா!' என்று அனைத்து அரற்றிய காலத்தில் அங்கிருந்தோர் அனைவரும், 'அடைப்பக்காரனை மன்னர் மகாவித்துவானென மதித்துச் சன்மானித்து அவனுக்குச் சபையில் உயரிய ஆசனம் அளித்ததுமன்றி, தம்முடன் வைத்து உணவும் அருந்தினரே!' எனப் பலவாறு பேசிக்கொண்டிருந்தனர். இறைவனும் எண்ணுதும் எண்ணி நெஞ்சம் புண்ணேயாயினன். ஆயினும், நுண்ணறிவுடையோனதலால், இவன் அம்பட்டனுகில், கம்பர் இவனைத் தம்மிடத்தில் அடைப்பைத் தொழிலில் அமைத்துக் கொள்வரோ? அவசரப்படாமல், ஆராய்ந்து அறிய வேண்டுமென்று உன்னித் தன் ஒற்றரை யேவினன். அவர்கள் உரு மாறி, அம்பட்டனும் அடைப்பைக்காரனும் அவையினின்றும் அகன்றபின்பு, அவர்களைத் தொடர்ந்து சென்று

அங்கு நடந்தன யாவும் சிறிதும் பிழையாமல் அறிந்துவந்து அரசற்கு அறிவித்தது மன்றி முடிவில் அடைப்பைக்காரன் அரசற்குச் சூளுரம் செய்ய வருவதையும் கூறினர். அரசன் அதனைக்கேட்டு, அடைப்பைக்காரன் அம்பட்டனே என நிச்சயித்து, அவனால் தனக்கு நேர்ந்த மானக்கேட்டை உன்னி யுன்னி மனமுளைந்து இருந்தான்.

இது இவ்வாறுக, 'உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போல' அடைப்பைக் காரனும் அம்பட்டனும் ஆண்டடைந்து அரசனை வணங்கி நின்றார்கள். அவர்களைக் கண்ட அரசன் இதன் உண்மையை அறிவோமென்று கம்பரை நோக்கி, நீங்கள் யாது கருதி இங்கு வந்தீர்கள்?' என்றான். அவர் தமக்கும் அம்பட்டனுக்கும் பாகம் பிரிந்தமை கூறி, 'அரசே! என் தம்பி இருபது வருஷம் தன் முறையாகத் தேவரீருக்கு ஊழியஞ் செய்ததே போல், யானும் அவ்வளவுகாலம் என் முறையாகத் தங்களுக்கு ஊழியஞ் செய்யுமாறு உத்தரவு பெற வந்தேன்' என்றார். அதற் கரசன், நாவிதன் கருத்தைக் கேட்டறிந்து, கம்பரை நோக்கி, 'நல்லது நீ விரும்பியவாறே யாகுக' என்றான். இது நிற்க, அப்போலி வித்துவான்களும் அம்பட்டனைக்கண்டு, நீ கொண்டகாரியத்தில் எதுவரினும் பயப்படாதை, சலியா முயற்சிகொண்டு சாதித்துவிடு' என்று உறுதி யுரைத்துக்கொண்டே வந்தனர். அவனும், 'அப்படியே ஆகட்டும்' என்று முயன்று வந்தனன்.

பிறகு, கம்பர் கலைமகளை மனத்தில் தியானித்து, 'என்னம்மே! இந்த ஆபத்துக்காலத்தில் அடியேனைக் கைவிடாது காக்கும் பொருட்டுத் திருவுளமிரங்கி உன் இடதுகால் சிலம்பை அருளிச் செய்தல் வேண்-

டும்' என்று வேண்டினர். அவர் வேண்டியவரே நாமகள் மனமிரங்கியருள, அத் தேவியாரது, கால் சிலம்பு ஒன்று கம்பர் கக்கத்தில் வந்தது. அதைக் கம்பர் எடுத்துச் சேரன் முன் வைத்தனர். அது, தோன்றி மறைதலில்லாத மின்னல்போல் விளங்க, இறைவன் கண்டு, 'இதேது, இரவியே இங்குப் போந்ததோ! அன்றி, தடித்தே தரைக்கண் இறங்கிற்றோ? யாதோ அறிதற்கில்லை' என்று ஐயமுற்று வினவ, கம்பர், நாவிதனைச் சுட்டி, 'இவன் தந்தையும் என் தந்தையும் ஒருதாயகட்டில் பிறந்த சோதரர். எமது மூதாதையர் அந்த நாளில் தேவரீரைப்போன்ற அரசர்பால் ஊழியஞ்செய்து இவ்வரிய சிலம்புகளைத் தேடினர். கைக்குச் சுலபமாக இருந்தமையால் தேசாந்தரம் போகையில் இவர்களொன்றும் யாங்களொன்றுமாகக் கையோடு காவலாகக் கொண்டுபோனோம். இழிகுலத்தரும், எளியோமுமாகிய எங்களுக்கு இத்தகைய சிலம்பாற் பயனென்ன? இது மன்னர் மன்னராகிய தங்களுக்கே தக்கது. இதனைத் தேவரீர் மனங்கொண்டு ஏற்றுக்கொள்வதுமன்றி, என் தம்பி வசத்துள்ள மற்றொரு சிலம்பினையுங் கொண்டு அரசியார் அழகிய கால்களிலிட்டால், அடியேங்கள் கண் குளிரக் கண்டு களிப்போம்' என்று கூறினர்.

அரசன் அவ்வொற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி வியந்து, மயிர்வினைஞனை நோக்கி, 'நின்பால் உள்ள மற்றொன்றையும் கொண்டுவருக' என, அவன் இதேது, 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல்' ஆயிற்று என்றெண்ணி, மெய் நடுக்குற்று மொழிகுழறி, ஒன்றுந் தோன்றுனைப் நிற்கக்கண்ட

கம்பர், 'தம்பி! அது நமக்கேன்? அருங்கலம் அரசர்க்கே யுரியது; அதைக் கொணர்ந்து கொடுத்து விடு' என, அவன் 'ஐயோ என்னிடத்தில் இல்லையே! இப்படிப்பட்ட சிலம்பை என் எழுபிறப்பிலும் கண்டறியேனே!' எனக் கைகளை முறுக்கிக் கொண்டு கன்றி நின்றான். கம்பர், மற்றும், 'அப்பா! ஒன்றும் ஒளியாதை; கொணர்ந்து கொடுத்துவிடு; அது நம்மிடத்திலிருந்து ஆவதென்ன? கள்ளிக்கு முள் வேலியும், கழுதைக்குக் கடிவாளமும் இடுவதும் உண்டோ? குடிப்பது கூழ் கொப்பளிப்பது பனிநீரா? வேண்டா, கொடுத்துவிடு. அரசர் நமக்கு வேண்டிய பொருள் தருவர்' என, நாவிதன், நாவெழாமல், 'குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாயிற்றே; என் செய்வேன் தெய்வமே' என்று தன்னுள்ளே எண்ணி, 'ஐயோ அது என்னிடத்தில் இல்லையே!' என்று கண்ணீர்விட்டுக் கதறி, மரம்போல் நிலத்து நின்றான்.

சேரன் அச் சிலம்பின் வனப்பைக் கண்டு வியந்து, மற்றும் நாவிதனை வற்புறுத்திக் கேட்டும், அவன் முற்கூறியவாறே, 'இல்லை, இல்லை' என, கம்பர், 'அடா தம்பி, மயிர் வினைஞராகிய நமக்கு இந்தச் சிலம்பேன்? வேண்டா, எடுத்துக் கொடுத்துவிடு' என, அவன், 'சத்தியமாக இல்லை' என்றான். அரசன், 'இவன், இல்லை யென்று ஆணையிடுகிறானே என்ன?' என, கம்பர், 'சுவாமி! இவன் மிகவும் கையழுத்தக்காரன்; சிறு வயதிலேயே அஞ்சாமற் பொய் யாணை யிடுவது இவன் சுபாவம்; இவ்வாறு பொறுமையோடுங் கேட்டாற் கொடுப்பானோ? மிதித்துப்

பிடுங்கினு லல்லாமல் "மயிலே மயிலே ஓர் இறகு கொடு" என்றுற் கொடுக்குமா?' என்றூர். எனலும் அரசனுணையால் ஏவலர் அவனைப் பிடித்துக் கம்பத்தில் இறுகக் கட்டி, உடலெங்கும் உதிரம் ஒழுகுமாறு புடைத்தனர். அம்பட்டன் அடிபொறுக்கமாட்டாமல், 'ஐயையோ! கட்டவிழ்த்து விட்டால் உள்ளதைச் சொல்லிவிடுகிறேன்' என்றான்.

எனலும், உடனே கட்டை யவிழ்த்து விட்டவினவ, அவன், 'ஆண்டவரே! இவரென் தமையனுமல்லர்; நானிவர் தம்பியுமல்லன். இவரதுவரலாற்றை ஒரு சிறிதும் யானறியேன்; இங்குள்ள கவிஞர்கள் இவர்மேற் பொறுமையால் என்னைக்கொண்டு இவ்வாறு சொல்வித்தனர். அதன்பொருட்டு அடியேனுக்கு அவர்க ளெழுதிக்கொடுத்த உடன்படிக்கையும் இருக்கின்றது' என்று அதைத் தருவித்து அரசன் சமுகத்தில் வைத்து, மற்றுமவர்கள் செய்யத் துணிந்த அல்வழிச் செய்கைகள் அனைத்தையும் பட்டோலை படித்தாற்போல் விரித்து உரைத்தனன். சேரன் அதுகேட்டு, 'ஓகோ! இது இவனுல் விளைந்ததன்று; வித்துவக் காய்ச்சலால் நேர்ந்தது; எய்பவன் எய்தால் அம்பென்ன செய்யும்?' என்று அம்பட்டன்மே லுள்ள சிற்றத்தைத் தணித்து, அவ்வித்துவான்களது வஞ்சகத்தை யுன்னி, நம்மால் பாலிக்கப்பட்ட இவர்கள் நமக்கே தீங்குசெய்தார்களன்றே?' என்று அவர்கள் அனைவரையுங் கழுவில் ஏற்றக் கட்டனே யிட்டான்.

அதுகண்ட, வித்துவான்கள் இந்தப் பேரிடுக்கு எவ்வாறு தப்புவது!

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்

என்னும் முதுமொழிக்கு நாமே இலக்காயினுமே என அனைவரும் ஒன்றுகூடி ஆராய்ந்து, தத்தம் மனைவியரை அடைப்பைக்காரன் அடிகளில் விழுந்து வேண்டிக்கொள்ளுமாறு அனுப்பினர். அம் மங்கையரும் வயிறலத்தோடி வந்து, கம்பர்முன் புலம்பி நின்று, முன்தானையைவிரித்து மாங்கல்யபிக்ஷை தர வேண்டுமென்று வேண்ட, கம்பர் அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி, 'வருந்தவேண்டா, உங்கள் மணாளருக்குத் தீங்கொன்றும் நேராவண்ணம் தக்கது புரிவோம்' என்று தேற்றி யனுப்பினர்.

பின்பு, கம்பர் அரசனையணுகி,'மன்னர் மன்ன! இவ்வுலகில் மாதா, பிதா, குரு, தபசிகள், வித்துவான்கள், விகடகவிகள், வீரர்கள், தானாதிபதிகள், தூதர்கள், பிணியாளர், பாலர், அடைக்கலம் புகுந்தோர் முதலாயினர் செய்த குற்றத்தைப் பாராட்டி அதற்காக அவர்களைக் கொலைசெய்வது நீதியன்று. அவர்கள் அறியாது செய்த குற்றத்தை மன்னிப்பதே அடைவாகும்' என, அரசனும் சீற்ற மாறி, விதித்த தண்டனையை நிறுத்திய பின்னர், கம்பரை நோக்கி, 'புலவீர்! இவ் வயிரச் சிலம்பு நமக்கு எவ்வாறு கிடைத்தது?' என்றான்.

கம்பர், 'இச் சிலம்பினை யணியும் செல்வியைத் தாம் தரிசித்தல் வேண்டுமென்னும் விருப்புளதேல் தரிசிக்கலாம்' என்று இயம்பி, அரசனுணையால், அகன்றதோர் மண்டபத்தின்கண் முத்துப்பந்தரிட்டு, பனிநீரிற் குழைத்த சந்தனத்தால் மெழுகி, முத்துப் பொடியாற் கோலமிட்டு, வாழை கமுக மரங்களை

நாட்டி, மலர்மாலை தூக்கி, நெய் விளக்கேற்றி, மூற்-புறத்தில் பட்டுத்திரையிட்டு, அதனுள் மரகத விமா-னத்தின்கண் மாணிக்கபீடம் அமைத்து, அதன் நாப்பணில் புனல் நிரம்பிய தங்கக் கலசம் ஒன்றி-னைத் தாபித்து, அதனில் கலிமகளை ஆவாகனஞ் செய்து, தோற்கருவி, தொளைக் கருவி, நரப்புக் கருவி முதலிய பலவகை வாச்சியங்கள் ஆரவாரிக்க விதிப்படியே பூசித்து, அஞ்சலித்து, திரைப்புறத்து நின்று, புதுவதாக அக் கலிமகள்மேல், சரசுவதி யந்தாதி என்னும் ஒரு பிரபந்தம் இயற்றி,

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்
படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி

எனப் பாடிப் பரவுதலும், கலிமகளார் ஒற்றைக் கால் சிலம்பு கலீர் கலீர் என்று சத்திக்க, அடி பெயர்த்து அற்புத நடனஞ் செய்ய, அரசன் முத-லாயினர் கண்குளிரக் கண்டு, படியில் விழுந்து பணிந்து பரவசமாயினர்.

அப்போது, கம்பர், அரசன் கையிலிருந்த சிலம்பை வாங்கிச் சாரதையின் இடதுபாதத்திற்கு நேரே நீட்டுதலும், அது அத் திருவடியிற் போய்ச் சேரக் கலிமகளார் திருவுருக் கரந்தனர். அது கண்ட சேரன், கம்பர்பால் ஐயமுற்று, 'அருந் தமிழ்ப் புலவீர்! நீவிர் யாவர்? நும் வரலாறு யாது?

உள்ளது உள்ளவாறே யுரைத்தல்வேண்டும்' என்று வேண்டி நிற்ப, கம்பர், தமக்குஞ் சோழற்கும் நடந்தவை யனைத்தும் நவின்றனர். நவிலக் கேட்ட சேரன், கம்பர்பால் பேரன்புடையனாய் ஆதரித்து வந்தான். ஆயினும், அவர் சிறிதுகாலம் தனக்கு அடைப்பைத் தொழில் செய்துவந்தமை கருதி, அவ்வப்போது விசனமுற்று, அதனைக் கம்பர்க்கும் வெளியிட்டதன்றி, தானுஞ் சிறிதுகாலம் அப் புலவர்க்கு அத் தொழிலினை இயற்ற அனுமதி யளித்தல் வேண்டு மென்று வேண்ட, கம்பர், 'அரசர் பெரும! அது முறையன்று, எமது உண்மை யறிந்து எம்பால் பணியேற்றீர் அல்லீர்; ஆதலின், அது குற்றத்தின்பாற் படாது; ஆயினும், தாமியற்ற விரும்பிய அப்பணியை எமக்கு வேண்டிய ஒருகாலத்துப் பெறுவோம்' எனக் கூறிச் சேரனைத் தேற்றினர்.

இவ்வாறு நெடுங்காலஞ் செல்ல, கம்பர் முகத்தைக் காணுது வருத்தமுற்ற சோழன், 'என்னே! ஆராயாது புரிந்த அருங்குற்றத்திற்கு யாது செய்வேன்!' எனப் பற்பல புகன்று மனங் கவன்று, 'அந்தோ! அவ் வருந்தமிழ்வாணர் இன்மையால் நமது அவைக்களம், தாமரையில்லாத் தடமும், சந்திரனில்லா இரவும், நதியில்லா நாடும், துதியில்லா நாவும், ஞானமில்லாக் கல்வியும், கற்பில்லாப் பெண்டிரும், புத்திரப்பேறில்லா இல்வாழ்க்கையுமெனப் பொலிவழிந்திருக்கிறதே! அப் புலவர் பெருமான் யாண்டுச் சென்றனரோ? எவ்விடத்து வதிகின்றனரோ? எனத் தன் அவைக்களத் துள்ளாரோடும் ஆராய்வானனன். அப்பொழுது, கம்பர் சேரன்பால் சிறக்க அமர்ந்துள்ளாரென ஒற்ற-

ராலுணர்ந்து, 'யான் ஆராயாதியற்றிய குற்றத்தினை மனங்கொள்ளாது வருக' எனத் திருமுகமொன்று தீட்டியனுப்பி, கம்பர் வருகையைப் பெரிதும் நாடி நின்றனன். அக் கவிஞர்பெருமானை யனுப்புமாறு சேரற்குந் திருமுக மனுப்பினன்.

கம்பர், சோழன் விடுத்த திருமுகங்கண்டு அக மகிழ்ந்து, 'நீர்கிழிய எய்த வடுப்போல' சிற்றமாறி, சேரன்பால் விடைபெற்று, அவனளித்த ஆடை, அணி முதலிய பரிசனைத்தும் பெற்று, பெருமகிழ்வுடன் சோணாட்டில் அரசன் அவைக்களத்தை யடைந்தனர். அடையக்கண்ட சோழன் இருக்கை விட்டெழுந்து, ஆவினைக்கண்ட இளங்கன்றெனப் பரிந்தோடி, கட்டி யணைத்து, உயரிய ஆதனத்தில் இருத்தி, ஆனந்தமடைந்து, தன்னை நீங்கிய பின்னர் நேர்ந்தவை யனைத்தும் வினவலுற்றனன்.

அதுகேட்ட கம்பர், தாம் சோணாடகன்ற பின்னர், தமக்கு வழியில் நேர்ந்தவை யனைத்தும் கூறினர். மற்றும் சேரநாட்டினைக் குறுகி, ஆண்டு அடைப்பைக்காரத் தொழிலில் அமர்ந்தமையும், பின்பு, தம் பிரசங்கத்தினைக் கேட்டு வியந்து, சேரன் அன்பு பாராட்டினமையும், அதனால் பொருமை மிக்க கவிஞர்கள் தமக்காக்கிய வஞ்சனை முதலியவும் விளங்கக் கூறினர்.

அக்காலத்தே சேரன், முன்பு கம்பர் தனக்கு அடைப்பைத் தொழிலை இயற்றினமைக்குப் பதிலாகத் தானும் அப்பணியைக் கம்பருக்கு இயற்ற விழைந்தவாறே, கம்பரது வேண்டுகோளுக்கிணங்கி, உருமாறி அடைப்பைத் தொழிலேற்று, கம்பர் பக்கலிலிருந்து அடைக்காய் முதலியவற்றைக் கம்-

பருக்கு அமைதியோடுங் கொடுக்க, கம்பர் அதனைப் பெற்றுக் கரத்தில் வைத்துக்கொண்டு சமிக்ஞை காட்டுதலும், சேரன் அரசன் அவைக்களத்தை நீங்கித் தன் பரிவிவர்ந்து விரைந்து செல்வானாயினன். பின்னர், சோழன், கம்பரை நோக்கி, 'புலவர் பெருமீ! தாம் கூறியவனைத்தும் உண்மையே; ஆயினும், முன்பு இச் சபையினீங்கிய காலத்து, "மற்றொருகால் ஈண்டு வருதல் நேருமாயின், உன்னை யொத்த மன்னனை எமது அடியனைகக் கொண்டு வருவோம்" எனக் கழறினீரன்றே?' என்றான். அப்போது அருங் கவிவாணர் அரையனை நோக்கி, 'இதுகாறும் ஈண்டு என் பக்கலில் இருந்த ஏந்தல் இன்னனென்று அறிந்திலையோ? இனியேனும் காலந்தாழ்த்தாது மாடியின்மீது இவர்ந்து காண்பாய்' என, மன்னன் அக்கணமே மாடியிவர்ந்து நோக்குதலும், சேரன் தன் பரிமா வகைத்து விரைவிற் செல்வது கண்டனன்.

கண்டலும், காவலன் கம்பரை வணங்கி, 'தெய்வப் புலவீர்! அடியேன் தமது சீர்த்தியை ஒரு சிறிதும் அறியா தொழிந்தேன். இன்று முற்றும் உணர்ந்தேன்' எனப் பன்முறை கூறி,

'மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்தேய மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு'

என்னும் உறுதிமொழியின் உண்மைப் பயனை யின்றே யறிந்தேன்' என்று தான் முன் அறியாது கூறிய குற்றத்தினை மன்னிக்குமாறு வேண்டினன். பின், இருவரும் அன்புற்று இன்புற்று வாழ்ந்திருந்தனர்.

ONE ANNA LIBRARY (TAMIL)

1.	NALA	நளன்
2.	KUCHELA	குசேலன்
3.	POETS' POVERTY	புலவர் வறுமை
4.	KANNAPPA	கண்ணப்பன்
5.	RUDRA	உருத்திரன்
6.	TIT-BITS	விநோதக் கூற்றுக்கள்
7	JIVAKA	சீவகன்
8.	KUMANA	குமணன்
9.	CHANDRA	சந்திரா
10.	VIKRAMARKA	விக்ரமார்க்கன்
11.	KAMBAN & CHOLAN	கம்பரும், சோழனும்
12.	BUDDHA	புத்தன்